இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 29 மார்ச் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- தவணைக் கடன் 3

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- தவணைக் கடன் 3 |
| திட்டத்தின் இலக்கம் | 47273-005 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன் |
| நிதியிடல் மூலம்/ தொகை | **கடன் 3325- SRI: ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- தவணைக் கடன் 3**<br>சாதாரண மூலதன வழங்கள் — US$ 175.00 மில்லியன்<br>**கடன் 3326- SRI: ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- தவணைக் கடன் 3**<br>ஆசிய அபிவிருத்தி நிதியம் — US$ 25.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>தனியார்த்துறை மேம்பாடு |
| துறை / உபதுறை | **போக்குவரத்து** – வீதிப் போக்குவரத்து (நகரமல்லாத) |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | பயனுள்ள பாலின பெருவோட்ட இணைவு |
| விவரணம் | தவணைக் கடன் 3 தென் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டம், மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் வட மேல் மாகாணம் ஆகியவற்றில் திட்டங்களின் இரண்டாம் பங்கிற்கு நிதியிடும். திட்டங்களின் முதற் பங்கு தவணைக் கடன்கள் 1 மற்றும் 2 இன் கீழ் நிதியிடப்பட்டிருந்தது. |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பும் | சமூகங்கள் சமூக பொருளாதாக மையங்களை அணுகுவதைத் தடுக்கும், அனைத்து காலநிலை இணைப்புச் சாலை இல்லாமை இலங்கையின் கிராமபபுறப் பிரதேசங்களில் ஒரு தீவிர பிரச்சினையாக உள்ளது. மோசமான சாலை உட்கட்டமைப்பு வறுமையுடன் ஒரு வலுவான இணைப்பைக் கொண்டிருப்பதுடன் கிராமப்புறப் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சி, |

| | |
|---|---|
| | விவசாய உற்பத்தித்திறன், மற்றும் வேலைவாய்ப்பினைப் பாதிக்கின்றது. தகுதியான இணைக்கப்படாத கிராமப்புறக் குடியிருப்புக்களுக்கு அனைத்து காலநிலை இணைப்புச் சாலையை வழங்குவதனை இலக்காகக் கொண்டு இலங்கை அரசாங்கம் நாடு தழுவிய கிராமப்புற சாலை முதலீட்டுத்திட்டத்தின் ஊடாக இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி வருகின்றது. உள்ளடக்கிய வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கான பிரதான புறக்கட்டுப்பாடுகளை கவனிப்பதனை இலக்காகக் கொண்ட அரசாங்கத்தின் முன்னுரிமைகளுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான 2015-2016 இடைக்கால நாட்டு கூட்டு மூலோபாயம் நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றது. நாட்டின் கூட்டு மூலோபாயம், சந்தைகள், சுகாதாரம், கல்வி, மற்றும் நிர்வாக சேவைகளுக்கான அணுகலை வழங்கும் கிராமப்புற அபிவிருத்தியில் முக்கியமாக உள்ள, குறிப்பாக கிராமப்புற சாலைகளின், போக்குவரத்துத் துறை மேம்பாட்டிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொடரும் உதவிகளை மீள உறுதிப்படுத்துகின்றது. |
| தாக்கம் | 2027 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள கிராமப்புற சமூகங்கள் மற்றும் சமூகபொருளாதார மையங்கள் இடையேயான இணைப்பினை மேம்படுத்தல் (ஆண்டறிக்கை, நிதி அமைச்சு, இலங்கை). |

**திட்ட விளைவு**

| | |
|---|---|
| விளைவின் விவரணம் | திட்ட சாலைகள் ஊடான போக்குவரத்து வினைத்திறன் அதிகரிக்கப்படல் |
| விளைவு நோக்கிய முன்னேற்றம் | |

**அமுலாக்கலின் முன்னேற்றம்**

| | |
|---|---|
| திட்ட வருவிளைவுகள் பற்றிய விவரணம் | தெரிவு செய்யப்பட்ட கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையங்களிற்கு இடையேயான சாலை நிலைமைகளை மேம்படுத்தல்<br>சாலை முகவர்களின் திறன் மேம்படுத்தப்படல் |
| அமுலாக்க முன்னேற்றத்தின் நிலை (வருவிளைவுகள், நடவடிக்கைகள், மற்றும் பிரச்சினைகள்) | |
| பூகோளம்சார் அமைவிடம் | |

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | B |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | B |
| சுதேச மக்கள் | C |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் சார்ந்த | உரிய தளரா முயற்சி அறிக்கைகள் எதிர்பார்ததைப் போன்று திட்டத்தின் தாக்கங்கள் |

| | |
|---|---|
| பார்வைகள் | இழிவானதாக இருப்பதாகக் காட்டுகின்றன. எந்த எதிர்பாராத சுற்றுச்சூழல் தாக்கங்களும் தவணைக் கடன் 1 மற்றும் 2 இனை நடைமுறைப்படுத்தியதில் இருந்து வெளிப்படையாக இல்லை. |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | உரிய தளரா முயற்சி அறிக்கைகள் திட்டத்தின் தாக்கங்கள் எதிர்பார்த்தது போன்று இழிவானதாக உள்ளதாகக் காட்டுகின்றன. எதிர்பாராத தன்னிச்சையற்ற மீள்குடியேற்றத் தாக்கங்கள் தவணைக் கடன் 1 மற்றும் 2 இன் நடைமுறைப்படுத்தியதில் இருந்து வெளிப்படையாக இல்லை. |
| சுதேச மக்கள் | தவணைக்கடன் 3 ஆசிய அபிவிருத்தி வங்கியின ் SPS இற்கு இணங்க பழங்குடி மக்களின் பிரிவு C என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தவணைக் கடன் 3 இன் கீழ் நிதியிடப்படவிருக்கும் அனைத்து உப திட்டங்களும் ஏற்கனவே தவணைக் கடன் 1 மற்றும் 2 இன் கீழ் முழுமையாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. |

**பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

| | |
|---|---|
| திட்ட வடிவமைப்பின் போது | திட்டச் சாலையோரங்களில் உள்ள மற்றும் பொது இடங்களில் குழு கலந்துரையாடல்களில் கவனஞ்செலுத்தும் அண்ணளவாக 20% குடும்பங்களை உள்ளடக்கிய தவணைக் கடன் 1 மற்றும் 2 இன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து திட்ட சாலைகள் வழியே அர்தமுள்ள ஆலோசனை மற்றும் சமூக ஆய்வுகள் மேற்கொள்ளட்டன. திட்டம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், மக்களின் தேவைகள் மற்றும் அக்கறைகளைத் தீர்மானிப்பதற்கும், மற்றும் நன்மைகளை மேம்படுத்துவதற்கும் எதிர்மறைத் தாக்கங்களைத் தணிப்பதற்கும் சமூகத்தின் பங்களிப்பு பெறப்பட்டிருந்தது. கிராமப்புற சாலைக் கூறுகளுக்காக, சாலை வடிவமைப்பினை முடிவு செய்வதற்கு, விசேடமாக (i) சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துதல் (ii) சுற்றுச்சூழல் தாக்கங்களைக் குறைத்தல், மற்றும் (iii) கட்டுமான தாக்கங்களைக் குறைத்தல் என்பன தொடர்பில் சமூகப் பங்களிப்பு அணுகுமுறைகள் பயன்படுத்தியமை உட்பட ஆழமான ஆலோசனைகள் இடம்பெற்றன. |
| திட்ட அமுலாக்கத்தின் போது | பின்பு அறிவிக்கப்படும் |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | ஆலோசனைச் சேவைகளுக்கான எந்த கொள்வனவு நடவடிக்கையும் தவணைக் கடன் 3 இல் இருக்காது, ஆலோசனைச் சேவைகள் தொடர்பான சகல கொள்வனவு நடவடிக்கைகளும் தவணைக் கடன் 1 மற்றும் 2 இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. |
| கொள்வனவு | குடிசார் வேலைகள் தொடர்பான எந்த கொள்வனவுகளும் தவணைக் கடன் 3 இருக்காது, குடிசார் வேலைகள் தொடர்பான சகல கொள்வனவுகளும் தவணைக் கடன் 1 மற்றும் 2 இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | அநுர நாணயக்கார |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி திணைக்களம் | தெற்காசியத் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவு, தெற்காசியப் பிராந்தியத் திணைக்களம் |

| | |
|---|---|
| நிறைவேற்று முகவர்கள் | **நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு,** INFO@MOHSL.GOV.LK<br>(தேசிய சாலைப் பாதுகாப்புச் செயலகம்)<br>செத்சிரிபாய அலுவலக வளாகம்,<br>த.பெ. இல. 53, பத்தரமுல்லை, இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | - |
| உண்மை அறிதல் | - |
| MRM | 14 செப்தெம்பர் 2015 |
| ஒப்புதல் | 23 நவம்பர் 2015 |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த PDS புதுப்பிப்பு | 04 செப்தெம்பர் 2015 |

கடன் 3325-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியான நிலை** |
| 23 நவம்பர் 2015 | 11 திசெம்பர் 2015 | - | 30 செப். 2021 | - | - |

| **நிதியிடற் திட்டம்** | | **கடன் பயன்பாடு** | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (தொகை அமெரிக்க டொலர், US$, மில்லியனில்) | திகதி | ADB | ஏனையோர் | நிகர சதவிகிதம் |
| திட்டச் செலவு | 198.88 | திரட்டிய ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| ADB | 175.00 | 23 நவம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரிநிரப்புக்கூறு | 23.88 | திரட்டிய கடன் கொடுப்பனவுகள் | | | |
| இணை நிதியிடல் | 0.00 | 23 நவம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |

கடன் 3326-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியான நிலை** |
| 23 நவம்பர் 2015 | 11 திசெம்பர் 2015 | 18 மார்ச 2016 | 30 செப்தெம்பர் 2021 | - | - |

| **நிதியிடற் திட்டம்** | | **கடன் பயன்பாடு** | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (தொகை அமெரிக்க டொலர், US$, மில்லியனில்) | திகதி | ADB | ஏனையோர் | நிகர சதவிகிதம் |
| திட்டச் செலவு | 25.00 | திரட்டிய ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| ஆஅவ | 25.00 | 23 நவம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரிநிரப்புக்கூறு | 0.00 | திரட்டிய கடன் கொடுப்பனவுகள் | | | |
| இணை நிதியிடல் | 0.00 | 23 நவம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது தோன்றும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிததுவங்களையோ மேற்கொள்ளவில்லை.